[1979 ஏப்ரல் 17

இணைப்பு II.

25ம் பக்கத்திலுள்ள உடுக்குறிபிட்ட வினா எண் 715-க்கான விடையைக் காண்க.]

விடை.

(அ) அண்டு (ஆ): ஆம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 301 கிராமங்களிலுள்ள 7,154 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 5 பேர் உயிரிழந்தனர். மீன் துறை மற்றும் தனி நபருக்குச் சொந்தமான 637 விசைப் படகுகள் சேதமடைந்தன. மீனவர்களின் 1,941 நாட்டுப் படகுகள் சேதமடைந்தன, 3,990 வலைகளும் சேதமடைந்தன. பயிர்ச் சேத பாதிப்பு விவரங்களாவன:—

பயிர்.	பரப்பு.	பாதிப்பின் அளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(ஏக்கரில்.)		
வாழை ..	1,185.00	முழுச் சேதம்.	550 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது
கரும்பு ..	120.31	,,	60 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
வெற்றிலை	207.54	,,	100 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
தேங்காய் (1,000 மரங்கள்)	10.00	,,	எல்லாமே சிறு விவசாயிகளைச் சார்ந்தது.

மேலும் சாலைகள், நீர்ப்பாசனங்கள் மற்றும் தனியார்களின் பொருள்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவரின் மதிப்பீட்டின்படி மொத்தச் சேதம் ரூபாய் 5.69 கோடி.

மற்ற மாவட்டங்களில் பாதிப்பு அதிகமில்லை.

(இ) அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரித் திங்களில் எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்

[1979 ஏப்ரல் 17

மீது அளித்துள்ள பதிலில் ஏற்கெனவே விவரமாகத் தெரிவித்துள்ளார். இருப்பினும், விவரங்கள் பின்வருமாறு :—

கடலோரக் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை தனி ரயில் மூலமும், தனி ஊர்திகள் மூலமும் அப்புறப்படுத்தி, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 20 கிராமங்களில் வசிக்கும் சுமார் 13,805 பேர்கள் 10 நிவாரண முகாம்களில் தங்கினர். மூன்றிலிருந்து நான்கு நாட்கள் அவர்களுக்கு ரூ. 16,577 மதிப்புள்ள 36,400 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சேதமுற்ற குடிசைகளுக்கான கருணை மானியம் ரூ. 100 அல்லது 50 ஆக ரூ. 3,58,680 வழங்கப்பட்டுள்ளது. முதலில் பாதிக்கப்பட்ட, மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டது. மேலும் மீனவர்கள் வீடிழந்து, படகுகள் சேதமடைந்ததால் மீன் பிடிக்கச் சில காலம் செல்ல இயலாததால், 135 கடலோரப் பகுதிகளில் வாழும் 5,439 மீனவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்குக் கூடுதலாக 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ரூ. 1,87,968 மதிப்புள்ள 5,874 வேட்டியும், புடவையும் வழங்கப்பட்டன.

இறந்துபோன 4 பேர்களுடைய குடும்பத்திற்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,000 வீதம் உதவித் தொகை கொடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் விவரங்களாவன :—

(1) கட்டுமரங்கள் :—

	ரூபாய்
(1) முழுமையாக பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும்	2,000
(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும்	1,000

(2) நாட்டுப் படகுகள்/வள்ளம் :—

(1) முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும்	4,000
(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும்	2,000

(3) நைலான் வலைகள் :—

முழுச்சேதம்	3,000

நிவாரணம் 50 சதவிகிதம் மானியமாகவும் 50 சதவிகிதம் கடனாகவும் அளிக்கப்படும். நிவாரணம் அளிப்பதற்கு முன் பணமாக மீன்துறை இயக்குனருக்கு அரசு ரூ. 50 இலட்சம் அளித்துள்ளது. கடன் தொகை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து 30 மாதத் தவணைகளாக வசூலிக்கப்படும். கடனும், மானியமும் வலைகள் தொலைந்திருந்தால் வலைகளாகவும், படகுகள், கட்டுமரங்கள் சேதமடைந்தால், பணமாகவும் கொடுக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மதுரையிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வட்டார அலுவலருக்கு, மீனவர்களுக்கு முழுச் சேதமடைந்த படகுகளை மீட்பதற்காக விசைப்படகிற்கு ரூ. 5,000-ம் நாட்டுப் படகிற்கு ரூ. 3,000 வீதமும் கடனுதவி செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் ரூ. 7,284 செலவு செய்து கொடுக்கப்பட்டது. ரூ. 4,750 செலவு செய்து, 11 ஊரணியில் உள்ள கடல் தண்ணீர் இறைக்கப் பட்டது.

சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளும், உரங்கள் 25 சதவீதம் குறைந்த விலையிலும் வழங்க உத்திரவிடப்பட் டுள்ளது.

யூரியா உரம் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் விலையை இலவச உதவியாகவும், மீதியைக் கூட்டுறவுக் கடனாகவும் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. மண்ணில் புதையுண்ட நிலங்களுக்கும், கிணறுகளுக்கும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவருக்கு 50 சதவிகிதம் உதவியாகவும், ஒரு ஏக்கருக்கு அல்லது ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் உதவி செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தென்னங்கன்றுகளை இலவசமாகவும், கரும்பு, வாழை இவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100 உதவித் தொகையாகவும், வெற்றிலைக்கு ரூ. 500 (ஒரு ஏக்கருக்கு) உதவித் தொகையாகவும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250-க்கும் நபர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கும் மேற்படாமல் உருளைக் கிழங்கு விதைகளுக்கு 25 சதவிகிதம் விலை இலவச உதவித் தொகையாகவும் காய்கறி தோட்டத்திற்கு விதைகள் இனாமாகவும், சிறு விவசாயிகளுக்கு அளிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978 நவம்பர் புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட 3 வட்டங்களான இராமநாதபுரம் (இராமேஸ்வரம் துணை வட்டம் உட்பட) முதுகுளத்தூர் (கமுதி துணை வட்டம் உட்பட) மேலும்

திருவாடானை ஆகிய இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் உள்ளாட்சி ஊழியர்கள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள், மேலும் முழு நேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்கள் இவர்கட்கு அளிக்கப்பட்ட சலுகைகளாவன :—

ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 400-க்கு அதிகமாகாத வகையில் முன்பணம் கொடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது; இப்பணத்தை 10 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்படும். ஆனால் (2) முழு நேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 200-க்கு அதிகமாகாத வகையில் முன்பணமாகக் கொடுக்கப்படும். இப்பணத்தை 20 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்படும்.

மேலும் மேலே குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களும், மற்றும் 3 வட்டங்களைச் சார்ந்த, ஆனால் வேறு இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களும், அவர்களது வீடோ மற்ற பொருட்களோ குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில் பாதிக்கப்பட்டிருப்பின் கட்டாய சேமிப்புநிதியிலிருந்துபணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இம்மாநிலத்தில் 1978 நவம்பர் திங்களில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் மொத்த ரூபாய் 2,284·15 லட்சம் நிதியுதவி கோரப்பட்டது. வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலைகள், சீரமைத்தல், பொதுக் கட்டிடங்களை புதுப்பித்தல், மீனவர்களுக்கு உதவி, நெசவாளர்களுக்கு உதவி, நகராட்சிகள் ஆகிய இப்பணிகளுக்கெல்லாமாக மத்திய அரசு ரூபாய் 1,011·40 லட்சம் திட்ட உதவி முன்பணமாக அளித்துள்ளது சேதமடைந்த சாலைகள், நீர்ப்பாசனங்கள், ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பள்ளிகள் முதலியவற்றை சீர்படுத்துவதற்கான பணிகளுக்காக அரசு நிதிஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை விரைவாக மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.